# சங்கரன்கோவில் நகராட்சி

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் தேதி திங்கள்கிழமை காலை 12.30 மணிக்கு நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக் கூட்ட நிகழ்ச்சி நிரல் :–

பொருள் எண் – 1

சென்னை. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.32945/2022/EA-SWM-4 நாள்.10.01.2023ன்படி சங்கரன்கோவில் நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாணமை பணிகளின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை எனத் தனித்தனியாக பிரித்து சேகரித்து மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு வரத் தேவையான பணியாளர்கள், வாகனங்கள் மற்றும் இதர செலவினங்கள் ஆகியவை சேர்த்து டன் ஒன்றுக்கு ரூ.**5184.22** என நிர்ணயம் செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியின்படி மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் நிறுவனத்தை தேர்வு செய்து முதல் வருடத்திற்கு உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், இரண்டு மற்றும் மூன்றாம் ஆண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனத்தின் திருப்திகரமான செயல்பாடு மற்றும் மன்ற ஒப்புதலின் அடிப்படையில் உத்தரவு வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திடக்கழிவு மேலாண்மை பணியினை மேற்கொள்ள இந்நகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.408.29 இலட்சம் செலவாகும் என்பதால் மேற்கண்ட செலவின தொகையை இந்நகராட்சி பொதுநிதி மற்று பொதுநிதியில் பற்றாக்குறை இருப்பின் 15$^{TH}$ CFC SWM TIED GRANT ஆகியவற்றில் இருந்து செலவு மேற்கொள்ளவும் அதற்கான அனைத்து செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம்.(கோப்பு எண்.2678/2022/எச்1)

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

இடம் – சங்கரன்கோவில்
நாள் – 20 .01.2023.

நகர்மன்றத் தலைவர்
சங்கரன்கோவில்.